SAIDAI DURAISAMY'S
MANIDHA NAEYAM FREE IAS ACADEMY
No.28, First Main Road, CIT Nagar, Chennai – 35
Ph: 044-2435 8373 Cell: 9840106162
Email : manidhanaeyam@gmail.com Website : www.saidais.com

# GROUP IV GENERAL TAMIL (06.11.2016)

1. 'தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்னூற் புலவன்' என்று மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனாரைப் பாராட்டியவர் **(9th தமிழ் பக்கம் 133)**
   a. கம்பர
   **b. இளங்கோவடிகள்**
   c. திருத்தக்க தேவர்
   d. காரியாசான்

2. கம்பரைப் புரந்தவர் யார்?**(10th தமிழ் பக்கம் 65)**
   a. ஒட்டக்கூத்தர்
   **b. சடையப்பவள்ளல்**
   c. சீதக்காதி
   d. சந்திரன் சுவர்க்கி

3. ஜி.யு.போப் திருவாசகத்தை எந்த மொழியில் மொழி பெயர்த்தார்? **(8th தமிழ் பக்கம் 15)**
   a. பிரெஞ்சு
   b. கிரேக்கம்
   **c. ஆங்கிலம்**
   d. ஜெர்மன்

4. நடுவணரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்த ஆண்டு? **8th தமிழ் பக்கம் 7)**
   **a. 2004**
   b. 2003
   c. 2005
   d. 2002

5. பெயரெச்சத்தை எடுத்து எழுது. **(10th தமிழ் பக்கம் 51)**
   a. படித்து
   b. எழுதி
   **c. வந்த**
   d. நின்றான்

6. பொருத்துக: **(7th தமிழ் பக்கம் 72)**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. அறுவை வீதி | 1.அந்தணர் வீதி |
| B. கூல வீதி | 2.பொற்கடை வீதி |
| C. பொன் வீதி | 3. ஆடைகள் விற்கும் வீதி |
| D. மறையவர் வீதி | 4.தானியக்கடை வீதி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| **b.** | **3** | **4** | **2** | **1** |
| c. | 1 | 3 | 2 | 4 |
| d. | 2 | 1 | 3 | 4 |

7. துணி கலையரசியால் தைக்கப்பட்டது - இதற்குரிய செய்வினை தொடரை தேர்ந்தெடு:**(10th தமிழ் பக்கம் 26)**

a. கலையரசி துணி தைத்தாள் b. கலையரசி தைத்தாள் துணி
c. கலையரசி என்ன தைத்தாள் **d. கலையரசி துணியைத் தைத்தாள்**

8. “ஒறுத்தாரை ஒன்றாக வையாரே” - இத்தொடரில் “ஒறுத்தார்” என்பதன் இலக்கணக் குறிப்பு **(9th தமிழ் பக்கம் 4)**
a. முற்றெச்சம் b. தொழிற்பெயர்
**c. வினையாலணையும் பெயர்** d. வினையெச்சம்

9. வா – என்னும் வேர்ச் சொல்லின் வினையெச்சத்தைக் கூறு.**(10th தமிழ் பக்கம் 51)**
a. வந்தான் **b. வந்து** c. வருதல் d. வந்த

10. பாரதிதாசனிடம் தொடக்க கல்வி பயின்றவர் (12**th தமிழ் பக்கம் 99)**
a. முடியரசன் **b. வாணிதாசன்** c. சுரதா d. மோகனரங்கன்

11. “விடிவெள்ளி” என்ற புனைப்பெயரைக் கொண்ட கவிஞர் **(தேவிரா 361)**
**a. ஈரோடு தமிழன்பன்** b. மு.மேத்தா
c. சாலை. இளந்திரையன் d. சுரதா

12. தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை பரிசு பெற்ற சுரதாவின் நூல் **(12th தமிழ் பக்கம் 102)**
a. துறைமுகம் b. சுவரும் சண்ணாம்பும்
**c. தேன்மழை** d. இது எங்கள் கிழக்கு

13. எனக்கு வறுமையும் உண்டு மனைவி மக்களும் உண்டு அவற்றோடு மானமும் உண்டு – எனக் கூறியவர் **(8th தமிழ் பக்கம் 146)**
**a. பாவணர்** b. காந்தி c. தெ.பொ.மீd. அயோத்திதாசப் பண்டிதர்

14. குறுந்தொகை எனும் நூலைத் தொகுத்தவர் **(9th தமிழ் பக்கம் 56)**
**a. பூரிக்கோ** b. நல்லாதனார்
c. கணிமேதாவியார் d. கார்மேகப்புலவர்

15. ‘உத்தர வேதம்’ என்று அழைக்கப்படும் நூல் **(11th தமிழ் பக்கம் 23)**
a. நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் b. நாலடியார்
**c. திருக்குறள்** d. இன்னாநாற்பது

16. பொருந்தாத ஒன்றைத் தெரிவு செய்க.
a. ஏலாதி **b. ஆசாரக் கோவை**
c. திரிகடுகம் d. சிறுபஞ்சமூலம்

17. ‘திரைக்கவித் திலகம்’ என்ற சிறப்புக்குரியவர் **(7th தமிழ் பக்கம் 87)**
a. வாலி b. உடுமலை நாராயண கவி
c. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் **d. மருதகாசி**

18. பொருத்துதல்: **(7th தமிழ் பக்கம் 36)**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. திணைமாலை நூற்றைம்பது | 1. உ.வே. சாமிநாதையர் |
| B. திரிகடுகம் | 2.கணிமேதாவியர் |
| C. திணைமொழி ஐம்பது | 3. நல்லாதனார் |
| D. புறப்பொருள் வெண்பாமாலை | 4. கண்ணஞ்சேந்தனார். |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 2 | 4 |
| b. | 1 | 4 | 2 | 3 |
| **c.** | **2** | **3** | **4** | **1** |
| d. | 4 | 3 | 2 | 1 |

19. 'இல்லை'– என்பதன் இலக்கணக் குறிப்பு கூறுக.

a. தெரிநிலை வினைமுற்று
b. எதிர்மறை பெயரெச்சம்
**c. குறிப்பு வினைமுற்று**
d. வியங்கோள் வினைமுற்று

20. 'Might is right' இதன் தமிழாக்கம்

a. 'கடமையே உரிமை'
**b. 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்**
c. 'வலிமையே சரியான வழி'
d.'ஒற்றுமையே வலிமை'

21. பொருத்துக: **(7th தமிழ் பக்கம் 79)**

| | |
|---|---|
| A. குமரன், தென்னை | 1. இடப்பெயர் |
| B. காடு, மலை | 2.காலப்பெயர் |
| C. பூ,காய் | 3. பொருட்பெயர் |
| D. திங்கள், வாரம் | 4. சினைப்பெயர் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 3 | 2 |
| **b.** | **3** | **1** | **4** | **2** |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 2 | 3 | 1 | 4 |

22. பம்பல் சம்பந்தம் நிறுவிய நாடக சபை **(தேவிரா 467)**

**a. சுகுணவிலாச சபை**
b. மாடர்ன் தியேட்டர்
c. பாய்ஸ் கம்பெனி
d. கூத்தப்பட்டறை

23. "இந்திய அரசியலில் சாணக்கியர்" என்று போற்றப்படுபவர்

a. காந்தியடிகள்
b. பாலகங்காதர திலகர்
**c. இராசகோபாலாச்சாரியார்**
d. சர்தார் வல்லபாய் படேல்

24. பூக்களில் சிறந்த பூ "பருத்திப்பூ எனக் கூறியவர்**(7th தமிழ் பக்கம் 90)**

a. சோமசுந்தரபாத்தியார் **b. திரு.வி.கலியாண சுந்தரனார்**

c. பாரதிதாசன் d. தாரா பாரதி

25. 'குயில்' என்ற இதழை நடத்தியவர் **(12th தமிழ் பக்கம் 98)**

a. சுரதா b. வாணிதாசன் c. பாரதியார் **d. பாதிதாசன்**

26. திருக்குறளில் "ஏழு" என்னும எண்ணுப்பெயர் எத்தனை குறட்பாவில் இடம் பெற்றுள்ளது?

a. 11 b. 09 **c. 08** d. 10

27. கீழ்கண்ட நூற்களில் "தமிழ் மூவாயிரம்" என்னும் வேறுபெயர் கொண்ட நூல் எது? **(8th தமிழ் பக்கம் 103)**

a. திரிகடுகம் b. திருவள்ளுவமாலை

**c. திருமந்திரம்** d. திருக்குறள்

28. "தொண்டர்சீர் பரவுவார்" என்று போற்றப்படுபவர் யார்?**(10th தமிழ் பக்கம் 110)**

a. அப்பூதியடிகள் b. திருநாவுக்கரசர்

**c. சேக்கிழார்** d. திருஞானசம்பந்தர்

29. யாருடைய அறிவுரைப்படி ஆதிரையிடம் மணிமேகலை முதன் முதலில் பிச்சையேற்றாள்? **(9th தமிழ் பக்கம் 127)**

a. கவுந்தியடிகள் b. மாதவி

**c. அறவணவடிகள்** d. கண்ணகி

30. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்.**(10 th தமிழ் பக்கம் 78)**

A. Writs — 1. வாரிசுரிமைச் சட்டம்

B. Succession Act — 2. உரிமைச்சட்டம்

C. Substantive Law — 3. சான்றுச்சட்டம்

D. Evidence Act — 4. சட்ட ஆவணங்கள்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 4 | 2 |
| **b.** | **4** | **1** | **2** | **3** |
| c. | 2 | 4 | 3 | 1 |
| d. | 1 | 2 | 3 | 4 |

31. "யாழ் கேட்டு மகிழ்ந்தாள்" - இவ்வாக்கியத்தில் யாழ் என்பது **(9th தமிழ் பக்கம் 46)**

a. சொல்லாகு பெயர் b. கருத்தாகு பெயர்

c. கரியவாகு பெயர் **d. கருவியாகு பெயர்**

SAIDAI DURAISAMY'S MANIDHA NEYAM

32. வாரணம், பௌவம். பரவை, புணரி என்பது ________ யைக் குறிக்கும். **(9th தமிழ் பக்கம் 65)**

a. சிங்கம் **b. கடல்** c. மாலை d. சந்தனம்

33. ''எயிறு'' என்னும் சொல் - சொல்லின் எவ்வகை?**(8th தமிழ் பக்கம் 39)**

a. திரிசொல் b. இயற்சொல்

c. வினைத்திரிசொல் **d. பெயர்த்திரிசொல்**

34. அரியதாம் உவப்ப உள்ளத் தன்பினால் அமைந்த காதல்
கீழ்க்காணும் விடைகளுள் சரியான விடை எது?**(9th தமிழ் பக்கம் 214)**

a. எதுகை மட்டும் வந்துள்ளது

b. எதுகையும். மேனையும் வந்துள்ளது

c. எதுகை, மோனை, அந்தாதி வந்துள்ளன.

**d. மோனை மட்டும் வந்துள்ளது.**

35. காரைக்குடி மீ.சு. உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர் **(8th தமிழ் பக்கம் 144)**

a. சுரதா b. கண்ணதாசன் **c. முடியரசன்** d. நா.காமராசன்

36. வள்ளலார் பதிப்பித்த நூல் **(10th தமிழ் பக்கம் 212)**

a. ஜீவகாருண்ய ஒழுக்கம் **b. சின்மய தீபிகை**

c. இந்திர தேசம் d. வீரசோழியம்

37. கவிஞர் சிற்பியின் சாகித்திய அகாதமி பரிசு பெற்ற நூல் **(11th தமிழ் பக்கம் 81)**

a. ஒளிப்பறவை b. சிரித்த முத்துக்கள்

**c. ஒரு கிராமத்து நதி** d. நிலவுப் பூ

38. அகழாய்வில் ''முதுமக்கள் தாழிகள்'' கண்டுபிடிக்கப்பட்ட ஊர் **(10th தமிழ் பக்கம் 137)**

a. தச்சநல்லூர் **b. ஆதிச்சநல்லூர்**

c. பெரவல்லூர் d. பெரணமல்லூர்

39. 'கம்பராமாயணத்தின் மணிமுடியாக விளங்கும் காண்டம்' **(12th தமிழ் பக்கம் 58)**

**a. சுந்தர காண்டம்** b. அயோத்திய காண்டம்

c. ஆரண்ய காண்டம் d. யுத்த காண்டம்

40. 'நூறாசிரியம்' என்னும் கவிதை நூலின் ஆசிரியர் **(9th தமிழ் பக்கம் 223)**

a. கவிஞர் மீரா b. கவிஞர் சுரதா

**c. கவிஞர் பெருஞ்சித்திரனார்** d. மு. மேத்தா

41. ‘மடங்கல்’ என்னும் சொல்லின் பொருள் **(10th தமிழ் பக்கம் 175)**
a. மடக்குதல் b. புலி c. மடங்குதல் **d. சிங்கம்**

42. அகநானூற்றின் கடைசி 100 பாடல்கள் அடங்கிய பகுதி **(11th தமிழ் பக்கம் 19)**
a. களிற்று யானை நிரை b. மணிமிடைப் பவளம்
**c. நித்திலக் கோவை** d. வெண்பாமாலை

43. இங்கு உடனிலை மெய்ம்மயக்கத்தைக் குறிக்கும் சொல் **(6th தமிழ் பக்கம் 32)**
a. பொன்மனம் **b. ஆர்த்து** c. உற்றார் d. சார்பு

44. பொருத்துக: **(9th தமிழ் பக்கம் 213)**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. இரண்டு சீர்களான அடி | 1. நெடிலடி |
| B. நான்கு சீர்களான அடி | 2. கழிநெடிலடி |
| C. ஐந்து சீர்களான அடி | 3. குறளடி |
| D. ஐந்துக்கும் அதிக சீரடி | 4. அளவடி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 2 | 1 | 3 | 4 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| **d.** | **3** | **4** | **1** | **2** |

45. அங்காப்பு என்பதன் பொருள்
a. சலிப்படைதல் **b. வாயைத் திறத்தல்**
c. அலட்டிக் கொள்ளுதல் d. வளைகாப்பு

46. “கார்குலாம்”– எனும்சொல் - எவ்வேற்றுமைத் தொகையைக் குறிக்கும்? **(10th தமிழ் பக்கம் 62)**
a. ஐந்தாம் வேற்றுமைத் தொகை
b. மூன்றாம் வேற்றுமைத் தொகை
**c. ஆறாம் வேற்றுமைத் தொகை**
d. நான்காம் வேற்றுமைத் தொகை

47. ‘சட்டை’ என்ற சிறுகதையை எழுதியவர்
a. பார்த்தசாரதி **b. ஜெயகாந்தன்**
c. மீரா d. புதுமைப்பித்தன்

48. “கிறிஸ்துவ சமயத்தாரின் கலைக் களஞ்சியம்”**(12th தமிழ் பக்கம் 66)** எனப் போற்றப்படும் நூல்
a. இரட்சண்ய மனோகரம் b. இரட்சண்ய யாத்திரிகம்

SAIDAI DURAISAMY'S MANIDHANAEYAM

c. போற்றி திருவகல் **d. தேம்பாவணி**

49. “மருமக்கள் வழி மான்மியம்”, - என்ற நூலை எழுதியவர் **(9th தமிழ் பக்கம் 126)**

**a. கவிமணி** b. சிவதாமு

c. பாரதிதாசன் d. புதுமைப்பித்தன்

50. “தென்னிந்தியச் சமூக சீர்திருத்தத்தின் தந்தை”**(10th தமிழ் பக்கம் 213)** என்று அழைக்கப்படுபவர்

a. பெரியார் b. அம்பேத்கர்

**c. அயோத்திதாசப் பண்டிதர்** d. இராமலிங்க அடிகளார்

51. “வள்ளுவரும் தம் குறள் பாவடியால் வையத்தார்
உள்ளுவதெல்லாம் அளர்ந்தார் ஓர்ந்து”
எனத் திருக்குறளை பாராட்டியவர் **(12th தமிழ் பக்கம் 49)**

a. பரிமேலழகர் b. கபிலர் c. மாங்குடி மருதனார் **d. பரணர்**

52. நூல் - நூலாசிரியர் அறிதல் **(9th தமிழ் பக்கம் 29, 107)**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. சயங்கொண்டார் | 1. சடகோபரந்தாதி |
| B. காரியாசான் | 2. புறநானூறு |
| C. கம்பர் | 3. கலிங்கத்துப்பரணி |
| D. கண்ணகனார் | 4. சிறுபஞ்சமூலம் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **3** | **4** | **1** | **2** |
| b. | 1 | 2 | 4 | 3 |
| c. | 2 | 1 | 3 | 4 |
| d. | 3 | 2 | 4 | 1 |

53. “என் பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்”
என்ற வரிகளைப் பாடியவர் **(10th தமிழ் பக்கம் 205)**

a. திருப்பாணாழ்வார் **b. குலசேகராழ்வார்**

c. பேயாழ்வார் d. ஆண்டாள்

54. ‘செறு’ என்பதன் பொருள்

a. செருக்கு b. சேறு c. சோறு **d. வயல்**

55. தமிழக அரசு, கவிஞர் சாலை, இளந்திரையனுக்கு வழங்கிய விருது **(10th தமிழ் பக்கம் 231)**

**a. பாவேந்தர் விருது** b. பாரதியார் விருது

c. கலைமாமணி விருது d. கவிச்செம்மல் விருது

SAIDAI DURAISAMY'S MANIDHA NEYAM

56. ஜி.யு.போப் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட ஆண்டு **(8th தமிழ் பக்கம் 15)**

a. 1786 b. 1806 c. 1856 **d. 1886**

57. 'மணநூல்' என அழைக்கப்பெறும் நூல் **(11th தமிழ் பக்கம் 35)**

a. சிலப்பதிகாரம் b. மணிமேகலை

**c. சீவக சிந்தாமணி** d. குண்டலகேசி

58. பொருத்துக: **(9th தமிழ் பக்கம் 107, 108)**

A. சிந்தை 1. நீர்

B. நவ்வி 2. மேகம்

C. முகில் 3. எண்ணம்

D. புனல் 4. மான்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 1 | 3 | 4 | 2 |
| **c.** | **3** | **4** | **2** | **1** |
| d. | 4 | 3 | 1 | 2 |

59. தமிழகத்துக்கு இறக்குமதி செய்யப்பட்ட சீனத்து பொருட்களை சரியாக காண்க. **(9th தமிழ் பக்கம் 66)**

a. ஏலமும், இலவங்கமும் b. இஞ்சியும், மிளகும்

**c. பட்டும், சருக்கரையும்** d. முத்தும், பவளமும்

60. இந்திய அரசு அண்ணல் அம்பேத்கருக்கு "இந்திய மாமணி" என்னும் உயரிய விருதை வழங்கிய ஆண்டு எது?**(10th தமிழ் பக்கம் 72)**

a. 1991 **b. 1990** c. 1993 d. 1992

61. "ஞானபோதினி" என்னும் இதழை தொடங்கி வைத்தவர் யார்? **(10th தமிழ் பக்கம் 21)**

a. முடியரசன் **b. மு.சி. பூர்ணலிங்கம்** c. நாமக்கல்லார் d. சுரதா

62. பரிதிமாற் கலைஞர் பிறந்த ஆண்டு **(10th தமிழ் பக்கம் 19)**

a. 1860 **b. 1870** c. 1880 d. 1890

63. பொருந்தாத நூலை எடுத்து எழுதுக. **8th தமிழ் பக்கம் 15)**

a. நான்மணிக்கடிகை b. நாலடியார்

**c. புறநானூறு** d. இனயவை நாற்பது

64. அறிவுடையார் நட்பு எதனைப் போன்றது **(8th தமிழ் பக்கம் 2)**

a. மலையைப் போன்றது b. கடலைப் போன்றது

**c. வளர்பிறையைப் போன்றது** d. தேய்பிறையைப் போன்றது

65. பட்டியல் Iல் உள்ள சொற்றொடரைப் பட்டியல் IIல் உள்ள சொற்றொடருடன் பொருத்தி கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:**(10th தமிழ் பக்கம் 4)**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. ஒழுக்கத்தின் எய்துவர் | 1. செல்வம் நிலைக்காது |
| B. இழுக்கத்தின் எய்துவர் | 2. மேன்மை |
| C. பொறாமை உடையவரிடம் | 3.உயர்வு இருக்காது |
| D. ஒழுக்கமில்லாதவரிடம் | 4. எய்தாப் பழி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **2** | **4** | **1** | **3** |
| b. | 2 | 3 | 1 | 4 |
| c. | 1 | 4 | 2 | 3 |
| d. | 3 | 4 | 1 | 2 |

66. வாய்மை எனப்படுவது **(7th தமிழ் பக்கம் 3)**
a. குற்றமோடு பேசுதல்
b. மற்றவர் வருந்த பேசுதல்
c. சுடும் சொற்களைப் பேசுதல்
**d. தீங்கு தராத சொற்களைப் பேசுதல்**

67. “இறந்தும் இறவாது வாழும் தமிழ் மாணவர்!
அவர் தமிழ் உள்ளங்களில் இன்றும் வாழ்கின்றார் **(8th தமிழ் பக்கம் 15)**
என்றும் வாழ்வார்”– யார்?
a. உ.வே.சாமிநாதர்
**b. ஜி.யு. போப்**
c. கால்டுவெல்
d. வீரமாமுனிவர்

68. “இந்திய நூலகத் தந்தை” எனப் போற்றப்படுபவர்**(10th தமிழ் பக்கம் 239)**
a. சி.இராமநாதன்
**b. சி.இரா. அரங்கநாதன்**
c. ப. கமலநாதன்
d. ம. இளந்திரையன்

69. “வினையே ஆடவர்க்குயிர்” எனக் கூறும் நூல் **(10th தமிழ் பக்கம் 132)**
**a. குறுந்தொகை**
b. கலித்தொகை
c. புறநானூறு
d. பரிபாடல்

70. “மனமொத்த நட்புக்கு**(10th தமிழ் பக்கம் 211)**
வஞ்சகம் செய்யாதே”
இக்கூற்றை கூறியவர்
a. கணியன் பூங்குன்றனார்
b. கம்பர்
c. உமறுப்புலவர்
**d. வள்ளலார்**

71. பொங்கலை “அறுவடைத் திருவிழாவாகக்” கொண்டாடும் மேலை நாடுகள் **(9th தமிழ் பக்கம் 208)**

a. இலங்கை, மலேசியா **b. ஜப்பான், ஜாவா**
c. மொரீசியஸ், சீங்கப்பூர் d. இங்கிலாந்து,அமெரிக்கா

72. ஜி.யு.போப் தொகுத்த நூலின் பெயர் **(8th தமிழ் பக்கம் 14)**
a. கலம்பகம் b. காவலூர்க் கலம்பகம்
c. கதம்பமாலை **d. தமிழச்செய்யுட் கலம்பகம்**

73. கண்ணதாசன் படைத்த இனிய நாடகம்**(9th தமிழ் பக்கம் 44)**
a. மாங்கனி b. ஆயிரம் தீவு
c. அங்கயற்கண்ணி **d. இராச தண்டனை**

74. வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள் எந்த நூலில் கூறினார்? **(9th தமிழ் பக்கம் 183)**
a. இந்தியன் ஒப்பினியன்
b. டிஸ்கவரி ஆப் இந்தியா
**c. தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகம்**
d. யங் இந்தியா

75. "நான் தனியாக வாழவில்லை**(9th தமிழ் பக்கம் 115)**
தமிழோடு வாழ்கிறேன்"
இக்கூற்றுக்குரியவர் தமிழ் மூச்சை விட்டு சென்ற நாள்
a. 1973 – செப்டம்பர் - 17 b. 1943 – செப்டம்பர் - 17
**c. 1953 செப்டம்பர் - 17** d. 1963 – செப்டம்பர் - 17

76. மோசிகீரனார் உடல் சோர்வினால் முரசுக் கட்டிலில் உறங்கிய போது கவரி வீசிய மன்னன் **(7th தமிழ் பக்கம் 19)**
**a. சேரன் பெருஞ்சேரல் இரும்பொறை** b. பாண்டியன் நெடுஞ்செழியன்
c. கோப்பெருஞ்சோழன் d. முதலாம் குலோத்துங்கன்

77. பொருத்துக: **(10th தமிழ் பக்கம் 32)**
A. கவுந்தியடிகள் 1. ஆயர்குல மூதாட்டி
B. மாதரி 2.மாநாய்கனின் மகள்
C. மாதவி 3.சமணத்துறவி
D. கண்ணகி 4. ஆடலரசி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **3** | **1** | **4** | **2** |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 1 | 3 | 2 | 4 |

78. கடிகை என்பதன் பொருள் யாது? (**6th தமிழ் பக்கம் 42**)
**a. அணிகலன்** b. கடித்தல் c. கடுகு d. காரம்

79. 'கற்றவனுக்குக் கட்டுச்சோறு வேண்டா'(**6th தமிழ் பக்கம் 60**) எனக் கூறும் நூல்
a. நான்மணிக்கடிகை **b. பழமொழி நானூறு**
c. ஏலாதி d. திரிகடுகம்

80. குரூக், மால்தோ, பிராகுயி என்பன (**9th தமிழ் பக்கம் 9**)
a. தென் திராவிட மொழிகள் b. நடுத்திராவிட மொழிகள்
**c. வடதிராவிட மொழிகள்** d. மேலை நாட்டு மொழிகள்

81. "ஓர் இலட்சிய சமூகம் - சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது" என்றவர் (**10th தமிழ் பக்கம் 71**)
a. பெரியார் **b. அண்ணல் அம்பேத்கர்**
c. காந்தியடிகள் d. திரு.வி.க

82. திரு.வி. கல்யாணசுந்தரனார் எழுதாத நூல் எது? (**9th தமிழ் பக்கம் 114, 115**)
a. முருகன் அல்லது அழகு **b. சித்திரக்கவி**
c. உரிமை வேட்டல் d. தமிழ்ச் சோலை

83. பொருந்தாதனவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (**8th தமிழ் பக்கம் 108**)
a. சூசையப்பர் தேம்பாவணியின் பாட்டுடைத் தலைவர்
b. திருமந்திரம் சைவத்திருமுறைகளில் பத்தாவது திருமுறை
c. சங்கரதாஸ் சுவாமிகள் தமிழ் நாடகத் தலைமையாசிரியர்
**d. மதங்க சூளாமணியை இயற்றியவர் மறைமலை அடிகள்**

84. "உவமைத்தொகை" இலக்கண குறிப்பிற்கு பொருந்தாத சொல்லை காண்க. (**10th தமிழ் பக்கம் 121**)
a. கயல்விழி b. மலர் முகம் **c. வெண்ணிலவு** d. தாமரைக் கண்கள்

85. "கெடாஅ வழி வந்த கேண்மையார் கேண்மை (**9th தமிழ் பக்கம் 17**)
விடா அர் விழையும் உலகு" - இத்தொடரில் இடம் பெற்ற அளபெடை
a. இன்னிசை அளபெடை **b. செய்யுளிசை அளபெடை**
c. சொல்லிசை அளபெடை d. ஒற்றளபெடை

86. இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும் இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என ஏற்றுக் கொள்ளப்படும் வழுவை கண்டுபிடி. (**9th தமிழ் பக்கம் 117**)
**a. வழுவமைதி** b. வினாவழு c. காலவழு d. வழாநிலை

87. 'யவனர்' என பழந்தமிழரால் அழைக்கப்பட்டோர் (**9th தமிழ் பக்கம் 64**)
a. ஆங்கிலேயர், போர்ச்சுகீசியர் **b. கிரேக்கர், உரோமானியர்**

c. பிரெஞ்சுக்காரர், அமெரிக்கர் d. சீனர், மலேசியர்

88. பாண்டவர்களிடம் தூது சென்றவர் யார்? **(9th தமிழ் பக்கம் 31)**
**a. விதுரன்** b. துரிபேயாதனன் c. தர்மன் d. சகுனி

89. நற்றிணை பாடல்களைத் தொகுப்பித்தவர் **12th தமிழ் பக்கம் 26)**
a. பூரிக்கோ b. பாண்டியன் உக்கிர பெருவழுதி
**c. பன்னாடு தந்த மாறன் வழுதி** d. உருத்திய சன்மார்

90. "__________ நெடுநீர்வாய்க் **(10th தமிழ் பக்கம் 63)**
கடிதினில் மடஅன்னக் கதியது செலநின்றார்"
இவ்வடிகள் இடம்பெறும் நூல்
a. பெரியபுராணம் b. மணிமேகலை
**c. கம்பராமாயணம்** d. சீவக சிந்தாமணி

91. "புலனழுக்கற்ற அந்தணாளன்"– எனப் பாராட்டப்படுபவர்**(11th தமிழ் பக்கம் 15)**
a. ஓதலாந்தையார் b. நக்கீரர்
c. பரணர் **d. கபிலர்**

92. 'சதகம் என்பது ________ பாடல்களைக் கொண்ட நூலைக் குறிக்கும். நிரப்புக.
a. 10 **b. 100** c. 400 d. 1000

93. பொருத்துக: **(9th தமிழ் பக்கம் 180)**
A. வசன நடை கை வந்த வல்லாளர் 1. இராமலிங்க அடிகள்
B. புது நெறி கண்ட புலவர் 2. நாமக்கல் கவிஞர்
C. தைரிய நாதர் 3. ஆறுமுக நாவலர்
D. காந்தியக் கவிஞர் 4. வீரமாமுனிவர்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **3** | **1** | **4** | **2** |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 2 | 1 | 3 | 4 |
| d. | 1 | 4 | 2 | 3 |

94. உ.வே. சாமிநாத ஐயரின் ஆசிரியர் பெயர் **(7th தமிழ் பக்கம் 24)**
a. ரா.பி. சேதுப்பிள்ளை b. கடிகை முத்துப்புலவர்
c. சி.இலக்குவனார் **d. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்**

95. பொருத்துக: **(7th தமிழ் பக்கம் 10)**
A. சிறுமலை, பூம்பாறை 1. முல்லை நில ஊர்கள்
B. ஆற்காடு, பனையபுரம் 2. நெய்தல் நில ஊர்கள்
C. ஆத்தூர், கடம்பூர் 3. குறிஞ்சி நில ஊர்கள்

D. கீழக்கரை, நீலாங்கரை 4. மருத நில ஊர்கள்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| **c.** | **3** | **1** | **4** | **2** |
| d. | 4 | 2 | 1 | 3 |

96. இதில் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது யாருடைய மொழி **(9th தமிழ் பக்கம் 64)**
a. கணியன் பூங்குன்றனார் b. பாரதியார்
**c. ஔவையார்** d. கம்பர்

97. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க. **(6th தமிழ் பக்கம் 30)**
a. நைதல் நாடு நொச்சி நுங்கு b. நுங்கு நொச்சி நாடு நைதல்
c. நொச்சி நுங்கு நைதல் நாடு **d. நாடு நுங்கு நைதல் நொச்சி**

98. பொருத்துக:

| பிறமொழிச் சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| A. ஐதீகம் | 1. விருந்தோம்பல் |
| B. இருதயம் | 2. சொத்து |
| C. ஆஸ்தி | 3. உலக வழக்கு |
| D. உபசரித்தல் | 4. நெஞ்சகம் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 1 | 4 |
| **b.** | **3** | **4** | **2** | **1** |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 1 | 2 | 3 | 4 |

99. பிறமொழிச் சொற்கள் களவாத தொடரை எடுத்து எழுதுக.
a. சினிமா தியேட்டர் அருகாமையில் உள்ளது
b. திருநெல்வேலி சமஸ்தானம் பெரியது
c. வழாவிற்கு முக்கியஸ்தர்கள் வந்துள்ளனர்.
**d. வானூர்தி ஒரு அறிவியல் ஆக்கம்**

100. இலக்கணக் குறிப்பு அறிக. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்து **(9th தமிழ் பக்கம் 16)**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. உரிச்சொற்றொடர் | 1. சூழ்கழல் |
| B. வினைத் தொகை | 2.தழீஇய |
| C. ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் | 3. தடக்கை |

D. சொல்லிசை அளபெடை 4. கூவா

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| **b.** | **3** | **1** | **4** | **2** |
| c. | 1 | 3 | 2 | 4 |
| d. | 4 | 1 | 2 | 3 |

மனித நேயம் வளர்ப்போம் மாறுபட்ட சிந்தனையுடன் SAIDAI DURAISAMY'S MANIDHA NEYAM